*1998 நவம்பர் 25]* [திரு. எஸ் திருநாவுக்கரசு]

சூழ்நிலையை உருவாக்க அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளதா என்பதையும் அறிய விரும்பி அமைகிறேன்.

முற்பகல் *10-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடிக்கு அருகிலே இயங்கக்கூடிய ஸ்டெர்லைட் ஆலை, சுற்றுப்புறச் சூழலைக் கெடுக்கக்கூடியது. அந்த ஆலையை அந்தப் பகுதியிலே தொடங்கக் கூடாது என்று ஆரம்ப கட்டத்திலே இருந்து, தூத்துக்குடி மாவட்டத்தில், மீனவர்களும், பொதுமக்களும் பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். ஆனால், இந்த எதிர்ப்புகளையெல்லாம் மீறி, மத்திய அரசும், மாநில அரசும், அந்தத் தொழிற்சாலையைத் தொடங்குவதற்கு அனுமதியளித்தன. அந்த தொழிற்சாலை தொடங்கப்பட்ட நாளிலேயிருந்து இதுவரை எத்தனையோ விபத்துக்கள் நடந்திருக்கின்றன. கடந்த ஆண்டுகூட திடீரென்று ஏற்பட்ட புகையின் காரணமாக நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் மயக்கமடைந்த செய்திகள் எல்லாம் வந்தது தெரியும். கடந்த சில தினங்களுக்கு முன்பு 4 பொறியாளர்களே ஒரு விபத்தில் கருகியிருக்கிறார்கள். இன்று அந்தத் தொழிற்சாலையிலேயிருந்து வெளியேறக்கூடிய புகையின் காரணமாக சுற்றுப்புறச் சூழல் கெடுவது; சுவாசிக்கின்ற காற்றிலே நச்சுப் புகை கலப்பது; அந்தத் தொழிற்சாலையிலேயிருந்து வெளியேறக்கூடிய கழிவுநீரின் காரணமாக, கிணற்று நீர் பாழ்படுவது; அடுத்ததாக, அந்தத் தொழிற்சாலையிலுள்ள தரமற்ற இயந்திரங்களின் காரணமாக அடிக்கடி விபத்து ஏற்பட்டு உயிர்பலி ஏற்படுவது என இப்படிப்பட்ட திடீர் விபத்துக்களின் காரணமாக, சுற்றுப்புறச் சூழல் கெடுவதன் காரணமாக, மக்கள் எழுப்பிவரக்கூடிய போராட்டங்களுக்கு வெற்றி கிடைக்கக்கூடிய வகையிலே இப்போது உயர் நீதிமன்றம், அந்த ஆலைக்குக் கொடுத்திருக்கக்கூடிய அனுமதியை இரத்துச் செய்யச் சொல்லியிருக்கிறது. அதை தமிழ்நாடு அரசும், மத்திய அரசும் அப்படியே நிறைவேற்றி, அவர்கள் மீண்டும் உச்சநீதி மன்றத்திற்குச் சென்று தடை பெற்று, மீண்டும் ஆலையை நடத்துவதற்கு வாய்ப்பு இல்லாமல் நிரந்தரமாக மூடுவதற்கு முன்வர வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் வாயிலாக, புதிய தமிழகத்தின் கருத்தாக இந்த அரசுக்கு எடுத்துவைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டெர்லைட் தொழிற்சாலை குறித்து மாண்புமிகு

உறுப்பினர்கள் டாக்டர் இராமன் அவர்களும், திரு. சுப்பராயன் அவர்களும், திரு. திருநாவுக்கரசு அவர்களும், டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும், திரு. சந்தானம் அவர்களும் கருத்துரைகளை வழங்கியிருக்கிறார்கள். அவர்களுடைய கருத்துக்களுக்கு முரண்பட்ட கருத்து இந்த அரசுக்கு இல்லை என்பதை முதற்கண் நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே நம்முடைய டாக்டர் இராமன் அவர்கள் பேசும்போது, இனிமேலாவது இதுபோன்ற ஆலைகளுக்கு அனுமதி வழங்குவதைத் தீர ஆராய்ந்த பிறகு வழங்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். பேசிய உறுப்பினர்கள் அனைவரும் மத்திய அரசும், மாநில அரசும், இந்த அனுமதியை வழங்கியது தவறு என்ற பொருள்பட கருத்தைக் கூறியிருக்கிறார்கள். மாநில அரசு என்றால், இப்போது நடைபெறுகின்ற மாநில அரசு என்று பத்திரிகைகளிலே செய்தி வந்துவிடும் என்பதால், அதற்கு நான் ஒரு விளக்கம் தர விரும்புகிறேன். இப்போது வழங்கப்பட்டுள்ள உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பிலேகூட அவர்கள் திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"......According to the petitioners, the Union Ministry of Environment and Forests granted environmental clearnance to M/s. Sterlite Industries (India) Limited, to set up a large scale Copper Smelter Plant at Tuticorin on January 16, 1995. The Tamil Nadu Government granted the clearance on May 17, 1995. The clearance for the project was given ignoring the fact that three States had already rejected the proposal. The State Pollution Control Board gave its consent on May 22, 1995 to the industry to establish the plant in the SIPCOT Complex."

இதுதான் உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள ஒரு வரலாற்றுக் குறிப்பாகும். இந்த ஸ்டெர்லைட் நிறுவனம் நடத்தும் தாமிர உருக்காலை, தூத்துக்குடியிலே உள்ள சிப்காட் தொழிற்சாலை வளாகத்திலே உள்ளது, தீர்ப்பிலே குறிப்பிடப்பட்டு இருப்பதைப்போல.

*முற்பகல் 10-45*

இந்த நிறுவனம் ஃபிளிஸ்டர் காப்பர் ஆண்டொன்றுக்கு ஒரு டன்னும், கந்தக அமிலம் நாள் ஒன்றுக்கு 1,060 டன்னும், பாஸ்பரிக் அமிலம் நாள் ஒன்றுக்கு 350 டன்னும் தயாரிக்க 1994 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் விண்ணப்பித்தது. அன்றிருந்த தமிழக அரசு சுற்றுச்

சூழல் வாரியம் இந்தத் தொழிற்சாலையிலிருந்து பெறப்பட்ட கழிவு நீர் சுத்திகரிப்பு மற்றும் காற்று, மாசுத் தடுப்பு முறைகளடங்கிய கருத்துரையைப் பரிசீலித்து தடையில்லாச் சான்றிதழ் No Objection Certificate 1-8-1994 அன்று வழங்கியது. இத்தொழிற்சாலைக்கு அடிக்கல் 31-10-1994 அன்று நாட்டப்பட்டது. இத்தொழிற்சாலைக்கு மத்திய அரசு சுற்றுப்புறச் சூழல் ஒப்புதல் 18-1-1995 அன்று பெறப்பட்டது. தமிழக அரசின் சுற்றுப்புறச் சூழல் நலக் குழு இத்தொழிற்சாலைக்கு 17-5-1995-ல் ஒப்புதல் அளித்தது. தொழிற்சாலை அதன் உற்பத்திச் சோதனையை 1996 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் தொடங்கியது. மே மாதத்திற்குப் பிறகுதான் இந்த ஆட்சி வந்தது. 1996 மார்ச் திங்களில் உற்பத்திச் சோதனை தொடங்கப்பட்டுவிட்டது. முதலில் இத்தொழிற்சாலை சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவு நீரை கோவாவிலே உள்ள தேசிய கடல் வள ஆராய்ச்சி நிறுவனத்தின் பரிந்துரையின்பேரில் வங்காள விரிகுடா கடலில் வெளியேற்ற வாரியத்தினால் அனுமதியும் வழங்கப்பட்டது. ஆனால், கழிவு நீரைக் கடலில் வெளியேற்ற எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்ட காரணத்தால் சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவு நீரை மீண்டும் தொழிற்சாலையில் செயல்முறையில் பயன்படுத்திட அனுமதியைக் கோரியது. இந்தக் கோரிக்கையை வாரியம் பரிசீலித்து தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்க 14-10-1996 அன்று அனுமதியளித்தது. இந்தத் தொழிற்சாலை குறித்து பலவித எதிர்ப்புக் கருத்துக்கள் கூறப்பட்டதால், தமிழக அரசு மக்களின் மத்தியில் இருந்த அச்சத்தை மனதிலே கொண்டு மூன்று உறுப்பினர்கள் அடங்கிய ஒரு வல்லுநர் குழுவை நியமித்து இத்தொழிற்சாலை குறித்து அறிக்கை கோரியது. இந்தக் குழுவில் ஐதராபாத் Indian Institute of Chemical Technology-யைச் சேர்ந்த டாக்டர் ஏ. ஏ. கான். புது டெல்லி I.I.T.-யைச் சேர்ந்த டாக்டர் பிச்சுமணி, Pune National Chemical Laboratory-யைச் சேர்ந்த எச்.ஜி. ஜோக்லேக்கர் ஆகியோர் இடம்பெற்று, தங்கள் அறிக்கையை 1997 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் கொடுத்தார்கள்.

இந்த அறிக்கையில் இத்தொழிற்சாலை இயங்குவதால் சுற்றுப்புறச் சூழலுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்பட வாய்ப்பில்லை எனக் கூறப்பட்டிருந்தது. இதன்பேரில் 7-4-1997 அன்று இத்தொழிற்சாலைக்கு நீர் மற்றும் காற்று குறித்த சட்டங்களின்கீழ் இசைவாணை புதுப்பிக்கப்பட்டது. 3-5-1997 அன்று இராகவன் என்ற ஒப்பந்தத் தொழிலாளி gas cutting வேலை செய்து கொண்டிருக்கும்போது தீ விபத்துக்குள்ளாகி 7 ஆம் தேதி அன்று இறந்துவிட்டார். இதுகுறித்து

தொழிற்சாலைகள் ஆய்வாளர்களால் புலனாய்வு செய்யப்பட்டு, நிர்வாகத்தினர்மீது நீதிமன்றத்தில் தொழிற்சாலைகள் சட்டவிதிகளின்கீழ் வழக்கு தொடரப்பட்டு, நீதிமன்றம் 65 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தது. இத்தொழிலாளிக்கு அறுபதாயிரம் ரூபாய் ஒப்பந்தக்காரராலும், ஒரு இலட்சத்து எண்பத்தாறாயிரம் ரூபாய் இன்சூரன்ஸ் கம்பெனி மூலமும், நிர்வாகத்தால் ஒரு இலட்சம் ரூபாயும் வழங்கப்பட்டது. 5-7-1997 அன்று ஸ்டெர்லைட் தொழிற்சாலைக்கு அருகேயுள்ள திருவாளர் ரமேஷ் ஃப்ளவர்ஸ் தொழிற்சாலையில் பணிபுரிந்து கொண்டிருந்த மகளிர், ஸ்டெர்லைட் ஆலையிலிருந்து வெளிவந்த வாயுக் கசிவினால் பாதிக்கப்பட்டு, தூத்துக்குடி அரசு மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டார்கள் என்ற செய்தி வந்தது. உடனே தமிழக அரசும், மாசுக் கட்டுப்பாடு வாரியமும் சேர்ந்து இந்தத் தொழிற்சாலையை உடனடியாக மூட உத்தரவிட்டன. மேலும் இந்த விபத்தின் காரணத்தை அறிய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த காற்று மாசுத் தடுப்பு நிபுணர், டாக்டர் சொக்கலிங்கம், டாக்டர் எம். கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் பி.என். சாஸ்திரி மற்றும் டாக்டர் காந்தபாபா ஆகியோர் அடங்கிய குழுவை அமைத்தது.

இந்தக் குழு, அரசு மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்ட பாதிக்கப்பட்ட தொழிலாளர்களையும் மற்றும் மருத்துவர்களையும் 10 மற்றும் 11-7-1997 ஆகிய நாட்களில் நேரடி விசாரணை செய்து மேற்படி விபத்தானது ஸ்டெர்லைட் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் Sulphur-Di-Oxide வாயுவின் அடர்த்தியானது தொழிலாளர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பில்லை என்று கூறியது. மேற்படி விபத்து, ரமேஷ் ஃப்ளவர்ஸ் தொழிற்சாலையில் கையாளப்படும் இரசாயனப் பொருட்களின் கலவையிலிருந்து வெளிவரும் வாயுக் கசிவு மற்றும் Sulphur-Di-Oxide-டுடன் சேர்ந்து மகளிர் வேலைபார்க்கும் பகுதியில் பாதிப்பு ஏற்படுத்தியிருக்கக்கூடும் என்று பாதிக்கப்பட்டவர்களிடம் விசாரித்ததன் மூலம் தெரிய வந்தது.

இதன் பிறகு ஸ்டெர்லைட் தொழிற்சாலையை மீண்டும் இயக்க தமிழக அரசு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் 13-8-1997 அன்று அனுமதி வழங்கப்பட்டது. 30-8-1997 அன்று சுழலும் தாமிர உருக்கு சேமிப்பு உலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில், வெப்ப நிலையிலே உருக்கிய தாமிரம் தெறித்து, சங்கர் மற்றும் பெருமாள் என்ற இரண்டு தொழிலாளிகள் இறந்துவிட்டார்கள். இந்த விபத்திற்குப் பிறகு, தாமிர உருக்கு சேமிப்பு உலை சரி செய்யப்படும்வரை அதன் உபயோகத்திற்குத்

தடை செய்யப்பட்டு, 3-9-1997 அன்று உடனடியாக ஆணை பிறப்பிக்கப்பட்டது.

முற்பகல் 10-50

மும்பையிலே உள்ள தொழிற்சாலைகள் ஆலோசனை இயக்ககத்தைச் சேர்ந்த திரு. ஜி. வைத்தியநாதன் தலைமையில் இந்த விபத்தை புலனாய்வு செய்து, விபத்துத் தடுப்பு முறைகளைத் தெரிவிப்பதற்கு நான்கு பேர் அடங்கிய வல்லுநர் குழு தமிழக அரசால் 11-9-1997 அன்று நியமிக்கப்பட்டது. இந்தக் குழு பரிந்துரைத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டதைச் சரிபார்த்து, சென்னை உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையிலே சுழலும் தாமிர உருக்கு சேமிப்பு உலை உற்பத்தி தொடங்குவதற்கான அனுமதி 5-11-1997 அன்று அளிக்கப்பட்டது. தொழிற்சாலைகள் ஆய்வாளர்களால் விபத்து புலனாய்வு செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு, நீதிமன்றம் 3,60,000 ரூபாய் அபராதம் விதித்தது. இறந்த ஒவ்வொரு தொழிலாளிக்கும் இலட்சம் ரூபாய் வீதம் நிர்வாகத்தால் நிதி வழங்கப்பட்டது. 16-4-1998 அன்று தாமிர உருக்கு சேமிப்பு உலையில் தூசி சேகரிக்கும் அறையில் தூசி அடைத்துக்கொண்டது. அதனை ஒரு திறவையினுள்ளே கடப்பாறையினால் குத்தும்போது வெப்பமான தூசி பறந்து, தட்சிணாமூர்த்தி ராஜா, நடராஜன் என்ற தொழிலாளிகள் இறந்துவிட்டார்கள். நீதிமன்றத்திலே வழக்குத் தொடரப்பட்டு, 90 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. மறைந்த தொழிலாளி தட்சிணாமூர்த்தி ராஜாவுக்கு 1½ இலட்சம் ரூபாயும், நடராஜனுக்கு 1 இலட்சம் ரூபாயும் நிர்வாகத்தால் வழங்கப்பட்டது.

தமிழக அரசு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் ஒரு வல்லுநர் குழுவை அமைத்து திடீர் சோதனை நடத்தி அறிக்கை தரும்படி கேட்டுக்கொண்டது. அதன்படி வாரியத்தின் அறிவியல் ஆலோசகரும், உலக அளவில் புகழ்பெற்ற விஞ்ஞானியுமான டாக்டர் எம். சாந்தப்பா, டாக்டர் கே.ஆர். ரங்கநாதன், டாக்டர் சி.ஏ. சாஸ்திரி ஆகியோரைக் கொண்ட குழு, இந்தத் தொழிற்சாலையை 16-6-1998 அன்று ஆய்வு செய்தது. இக்குழு, ஸ்டெர்லைட் தொழிற்சாலைபற்றி திருப்தி தெரிவித்தது. சென்னை உயர் நீதிமன்றம் தனது 20-8-1998 ஆம் நாளைய உத்தரவில், மத்திய அரசு NEERI நிறுவனத்தின் மூலம் ஸ்டெர்லைட் தொழிற்சாலையை ஆய்வு செய்து 3 மாதத்திற்குள்

அறிக்கை தர உத்தரவிட்டது. 23-11-1998 அன்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. நீதிமன்றத்தில் NEERI இயக்குநர் நேரில் வந்து தனது அறிக்கையைத் தந்து, விளக்கத்தையும் எடுத்துக் கூறினார். இதற்கிடையில், 19-11-1998 அன்று கந்தக அமிலம் வெளியேற்றும் வேலையில் ஈடுபட்டிருந்த இரஞ்சன் குமார் உள்ளிட்ட 5 பேருக்குக் காயம் ஏற்பட்டு, மருத்துவமனையிலே சிகிச்சை பெற்று வருகிறார்கள். சென்னை உயர் நீதிமன்றம் NEERI இயக்குநர் எடுத்துரைத்த தொழிற்சாலையின் குறைகளையும், 19-11-1998 அன்று நடைபெற்ற தொழிற்சாலை விபத்தையும் காரணமாகக்கொண்டு, தொழிற்சாலையை மூடும்படியாக உத்தரவிட்டுள்ளது. மீண்டும் வழக்கு 1-12-1998 அன்று எடுத்துக்கொள்ளப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. இதுதான் இன்றுள்ள நிலவரம். மாநில அரசு உடனடியாக இந்த அனுமதியை இரத்து செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இங்கே எடுத்துக்கூறியிருக்கிறார்கள். அதில், எந்தவிதமான கருத்து வேறுபாடும் இந்த அரசுக்கு இல்லை என்பதையும், எந்த நடவடிக்கை எடுத்தாலும், நீதிமன்றங்கள் அதற்கிடையிலே தங்களுடைய தீர்ப்புகளை வழங்குவதையும் நாம் மனதிலே கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம். அந்த வகையிலே, அதையும் கருதிப்பார்த்து, அரசு நிச்சயமாக நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதையும், இந்த அரசு இந்த ஆலை வருவதற்குப் பொறுப்பல்ல என்றாலும்கூட, அதனால் ஏற்படுகின்ற கஷ்டநஷ்டங்களுக்குப் பொறுப்பேற்று, ஆவன செய்யும் என்ற உறுதியையும் இந்த அளவுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. தகவல் கோரல்

### (அ) குளிர்காலக் கூட்டத்தொடரில் உறுப்பினர்களுக்கு கம்பளி ஆடை அளிக்கக் கோருதல்

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குளிர்காலக் கூட்டத்தொடர். இப்போது கடுமையான குளிர் நிலவுகிறது. மாண்புமிகு பேரவை உறுப்பினர்களின் நலனைக் காக்கின்ற நீங்கள், காஷ்மீர் உல்லன் ஸ்வெட்டர் அனைத்து உறுப்பினர்களுக்கும் வாங்கித் தர ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.